2022 ஏப்ரல் 6]

சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

58—

முந்திரி தொழிற்சாலை

***7402—திரு. க.சொ.க. கண்ணன்:**

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, ஆண்டிமடம் பகுதியில் முந்திரி தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஜெயங்கொண்டம் தொகுதி, ஆண்டிமடம் பகுதியில் முந்திரி தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சொ.க. கண்ணன் அவர்கள்.*

திரு. க.சொ.க. கண்ணன்: *மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களையும் வணங்குகிறேன்,*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் மாவட்டத்தில், ஜெயங்கொண்டம், ஆண்டிமடம், செந்துறை ஆகிய தாலுகாக்களில் முந்திரி மானாவாரிப் பயிராக 80 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்யப்படுகிறது. ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளுடைய வாழ்வாதாரமாக இருக்கிறது. ஆண்டொன்றுக்கு 20,000 டன் முந்திரி அறுவடை செய்யப்படுகிறது. முந்திரிக்கு ஏற்கெனவே நிரந்தர விலை இல்லை. விலையில் ஏற்றத்தாழ்வு இருக்கிறது. எனவே, முந்திரியை உடைத்து, பழச்சாறு

தயாரித்து, மதிப்புக் கூட்டி உணவுப் பொருட்களாகத் தயாரித்து, பொது விநியோகத் திட்டத்தின்மூலம் பொது மக்களுக்கு வழங்கலாம். வெளி மாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யலாம். இதனால், அன்னியச் செலாவணிமூலம் வருமானம் பெற முடியும். தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைப்பதோடு, முந்திரி விவசாயிகள் இலாபம் பெறுவதற்கும் வாய்ப்பாக அமையும். எனவே, அரசு சார்பில் எந்தத் தொழிற்சாலையும் இல்லாத என்னுடைய ஜெயங்கொண்டம் தொகுதியில், முந்திரி தொழிற்சாலையை அமைப்பதற்கு அரசு முன்வர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் மாவட்டத்தில் 30,579 ஹெக்டேர் நிலப் பரப்பில் முந்திரி பயிரிடப்படுகிறது. 10,570 டன் முந்திரி கொட்டை மகசூல் செய்யப்பட்டு, அவற்றைப் பதப்படுத்தி 2,496 மெட்ரிக் டன் அளவில் முந்திரி பருப்பு தயாரிக்கப்பட்டு வருகிறது. அரியலூர் மாவட்டத்தில் ஒரு நடுத்தரத் தொழில் நிறுவனமும் மற்றும் 23 குறு, சிறு முந்திரி பதப்படுத்தும் நிறுவனங்களும் இயங்கி வருகின்றன. இந்நிறுவனங்களுக்குத் தேவையான மூலப்பொருளான முந்திரி கொட்டைகள் பற்றாக்குறையாக உள்ளதால், இந்நிறுவனங்களுக்குத் தேவையான முந்திரி கொட்டைகள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு தேவை பூர்த்தி செய்யப்படுகிறது. எனவே, அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் பகுதியில் அரசால் முந்திரி தொழிற்சாலை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சொ.க. கண்ணன் அவர்கள்.

திரு. க.சொ.க. கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்திரிக்கு சரியான விலை நிர்ணயம் இல்லை. பிற மாநிலங்களைப் போலவே தமிழகத்திலும் விலை நிர்ணயம் செய்ய வேண்டும். அதேபோல், ஆண்டிமடம் மற்றும் ஜெயங்கொண்டத்தில் தனியார் தொழிற்சாலைகள் ஏற்கெனவே இயங்கி வந்தன. அவை தற்போது செயல்படாத காரணத்தால், 5,000–க்கும் மேற்பட்ட

2022 ஏப்ரல் 6]

தொழிலாளர்கள் வேலைவாய்ப்பை இழந்திருக்கிறார்கள். எனவே, தனியார் தொழில்முனைவோர் எவரேனும் முந்திரி தொழிற்சாலை தொடங்க முன்வந்தால், அதற்கு உதவி செய்வதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் தொகுதியில் தனியார் முந்திரி பதப்படுத்தும் தொழிற்சாலை தொடங்க அரசு அனைத்து உதவிகளையும் செய்து வருகிறது. குறிப்பாக, 2021–2022 ஆம் ஆண்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் மூலமாகப் புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2 நிறுவனங்களும், வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டத்தின்கீழ் ஒரு நிறுவனமும், பிரதம மந்திரி வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் ஒரு நிறுவனமும் என மேற்கண்ட 3 திட்டங்களின்கீழ் தொடங்கப்பட்ட 4 முந்திரி ஆலைகளுக்கு ரூ.8,06,000/– மானியத்துடன் ரூ.19,96,000/– திட்ட மதிப்பிலான கடன் வழங்கப்பட்டு, தொழில்கள் நடைபெற்று வருகின்றன. தனியார் தொழில்முனைவோர் யாரேனும் தொழில் தொடங்குவதற்கு முன்வந்தால், இந்தத் துறையின் சார்பில் கடனுதவி வழங்கி, அவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளையும் வழங்கி, அவர்கள் தொழில் தொடங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 59, மாண்புமிகு உறுப்பினர் திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம், மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

59—

மீன்பிடித் துறைமுகம்

***14301—திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—